தினமணி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்தது

First Published : 18 Aug 2012 12:23:24 PM IST

ஈரோடு, ஆக., 18 : கர்நாடகத்தில் மழை குறைந்து, காவிரில் திறந்துவிடப்படும் உபரி நீரின் அளவு குறைந்ததால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்துள்ளது. இன்று காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 77 அடியாக உள்ளது.

மேட்டூர் அணைக்கு விநாடிக்கு 4 ஆயிரம் கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து வினாடிக்கு 2 ஆயிரம் கன அடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

---

தினகரன்

புதிய தொழில்நுட்பம் மூலம் பயிர்?சாகுபடி பயிர்களை கலெக்டர் ஆய்வு

பதிவு செய்த நேரம்:2012-08-18 10:54:54

கம்பம், : கம்பம் அருகே காமயக்கவுண்டன்பட்டியில் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நடக்கும் விவசாயத்தை தேனி கலெக்டர் பார்வையிட்டு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

வேளாண், தோட்டக்கலை, விவசாய பொறியியல் துறை உள்ளிட்ட துறைகளின் மூலம் கரும்பு துல் லிய பண்ணை திட்டம் அமைத்தலுக்கு ஹெக்டேருக்கு 93ஆயிரம் ரூபாய் உரம் மற்றும் சொட்டுநீர் பாசனத்திற்கு மானியம் வழங்கப்படுகிறது.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் நடவு முறை, துவரை சாகுபடி செய்வதற்கு ஹெக்டே ருக்கு ரூ.15ஆயிரம், வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் திருந்திய நெல் சாகுபடி திட்டத்தில் இயந்திரம் மூலம் களை எடுக்கும் கருவிக்கு ரூ.27ஆயிரத்து 400, தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் மூலம் திராட்சை பயிர் பரப்பு விரிவாக்கத்திற்கு 0.7ஹெக்டேருக்கு ரூ.28ஆயிரம் மானியமாக வழங்கப்ப டுகிறது.

மேலும் இத்திட்டத்தின் கீழ் வாழை பயிர் பரப்பு விரிவாக்கத்திற்கும், திசு வாழை நடவிற்கும் ஹெக்டே ருக்கு ரூ.93ஆயிரத்து 606ம், நுண்ணீர் பாசனத்திற்கு 3ஹெக்டேருக்கு ரூ.1லட்சத்து 34ஆயிரமும் மானிய மாக வழங்கப்பட்டு வருகிறது.

இதன் மூலம் பயன்பெற்று வரும் விவசாயிகளின் விளை நிலங்களுக்கு கலெக்டர் பழனிச்சாமி நேரடியாக சென்று பார்வையிட்டு குறைகளை கேட்டறிந்தார்.

கம்பம் அருகே உள்ள காமயக்கவுண்டன்பட்டியை சேர்ந்த பரத்ராஜ் என்ற விவசாயியின் நிலங்களை பார்வையிட்டு, நிலத்தடி நீரை சிக்கனமாக பயன்படுத்தி விளைச்சலை பெருக்க வேண்டும். சுற்றுச்சூழல் மாசுபடாதவாறு பூச்சி மருந்து தெளிப்பதை கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பின்னர் தோட்டக்கலைத்துறை மூலம் புதிதாக நடவு செய்யப்பட்ட ஏற்றுமதி தரம் வாய்ந்த திராட் சை கொடிகளையும் கலெக்டர் பார்வையிட்டார். தோட்டக்கலை துறை துணை இயக்குநர் முருகன், கம்பம் தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் ராஜா உள்பட அதிகாரிகள் உடன் சென்றனர்.